மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நிதி வசதி தற்சமயம் பேரூராட்சியிலே இல்லை. கழிவு நீரைச் சேகரித்து, சுத்திகரிப்புச் செய்ய தேவையான இட வசதியும் இல்லை என்பதால், இப்பேரூராட்சியில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசம் ஏதுமில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகம், இதற்காக ஒரு நிரந்தரத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு உதவி செய்வதற்காகத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய, மாவட்டத்தினுடைய அமைச்சர். அவர் பல்வேறு காலகட்டங்களிலே, அந்தப் பேரூராட்சியிலே பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகத்தோடு பேசி, நிதி வசதி போதிய அளவு இல்லை என்றாலும், அரசும், நிர்வாகமும் சேர்ந்து, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை. தற்போது நகர்ப்புறப் பேரூராட்சிகளில், பயனாளிகள் பங்குத் தொகை முழுமையாக வரவேற்கப்பட வேண்டும். அப்படி வரவேற்கப்பட்டால், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், பயனாளிகளுடைய முழுப் பங்களிப்புத் தொகையின் வாயிலாக இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும் பரிசீலனையில் உள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

192—

கழிவு மூலம் மின்சாரம்

***20312—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 7

(அ) சேலம் மாநகராட்சி கழிவு (குப்பைகள்) மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் அன்றாடம் சேகரமாகும் குப்பையைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றினை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், சென்னை, அவர்களின் அறிவுரையின்பேரில், இம்மாநகராட்சியில் செயல்படுத்தலாம் என மாமன்றத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு, இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியினுடைய அனைத்துப் பகுதிகளிலிருந்தும், நகரின் மையப் பகுதியான கிச்சிப்பாளையம் பகுதியிலே, 18 ஏக்கர் நிலப் பரப்பில், தினசரி 200 டன்களுக்கு மேலாக, குப்பைகளையும், கழிவுகளையும் கொண்டுவந்து கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது நகரின் மையப் பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே குப்பைகள் எல்லாம் மலைபோல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால், நிலத்தடி நீரில் மாசு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி நகரின் மையப் பகுதியாக இருப்பதால், அங்கே துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டே இந்தத் திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால், தேங்கிக் கிடக்கின்ற குப்பைகளையாவது, இனி வருங்காலத்தில், நகரின் வெளிப் பகுதிக்குக் கொண்டு சென்று, அங்கே கொட்டுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்குமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் தினந்தோறும் பெறப்படும் திடக்கழிவுகள் 300 மெட்ரிக் டன்களாகும். ஐந்து மெகாவாட் மின்சாரம் தயாரிக்க, தோராயமாக 25 கோடி ரூபாய் செலவிடப்பட வேண்டும்

2003 ஏப்ரல் 7]

என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சேலம் மாநகராட்சியிலுள்ள குப்பைகளைத் தொலைதூரத்தில் அப்புறப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதைக் கருத்தில் கொண்டு, அதற்குண்டான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 5 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும் என்று கூறி இருக்கின்றார்கள். அந்த 5 மெகா வாட் மின்சாரத் திட்டத்தை - இன்றையதினம் சேலம் மாநகராட்சி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிலே செலவு செய்து கொண்டிருக்கிறது. அந்த மாநகராட்சி நிர்வாகம் எடுத்துக்கொள்கின்ற வகையிலே வழிவகை செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுவரையில் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஒரு கருத்துரு எந்த மாநகராட்சியிலும் இல்லை. ஆனால், லக்னோ மாநகராட்சி தற்சமயம் அதைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த அடிப்படையிலே சேலம் மாநகராட்சியில், திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை மத்திய மரபுசாரா எரிசக்தி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி B.O.O.T. அதாவது Build, Operate, Obtain and Transfer திட்டத்தின்படி, உருவாக்கி இயக்குதல், ஒப்படைத்தல் என்ற முறையில் செயல்படுத்த சேலம் மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்குத் தினமும் குறைந்தபட்சம் 300 மெட்ரிக் டன் திடக்கழிவு வேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் 30 வருட காலத்திற்குக் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். திடக்கழிவு இனாமாக வழங்கப்பட வேண்டும். திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்க மாநகராட்சிக்கு 15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யவேண்டும். மரபுசாரா எரிசக்தி வழிகாட்டுதலின்படி குறைந்த குத்தகையில்--Nominal Lease Amount அடிப்படையில்--மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும். லக்னோ மாநகராட்சியில் சதுர மீட்டருக்கு வருடத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, லக்னோ மாநகராட்சியில்

செயல்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சேலம் மாநகராட்சியிலும் செயல்படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் குறைந்தது 300 மெட்ரிக் டன், அதிகபட்சம் 400 மெட்ரிக் டன் வரை கழிவுகள் கிடைக்கின்றன. அங்கே குறிப்பாக, இடம் இல்லாமல், நகராட்சிப் பகுதிகளிலே தூய்மைப்படுத்தி, மீண்டும் குப்பைகளைப் போடுகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 15 ஏக்கர் நிலம் கண்டிப்பாக மாநகராட்சியை ஒட்டிய பகுதியிலே இன்றைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. கண்டிப்பாக அதை மாநகராட்சி நிர்வாகம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். சேலம் மாநகராட்சியின் சார்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.29 இலட்சம் மின்சாரக் கட்டணமாக மாநகராட்சி கட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அந்தத் திட்டத்தை மாநகராட்சி ஏற்று நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கார்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளை, மிக முக்கியமாகக் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை தமிழக அரசு—மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு—ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும்; பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

193—

கால்நடை மருத்துவமனை

***23383—திருமதி வி. அழகம்மாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—